திராவிட மாடல் அரசு பொறுப்பேற்று 5 ஆம் ஆண்டு தொடக்க விழாவை முன்னிட்டு

# அரசு போக்குவரத்துக் கழகம் சார்பில் 214 புதிய பேருந்துகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்!

சென்னை, மே 9 - திராவிட மாடல் அரசு பொறுப்பேற்று ஐந்தாம் ஆண்டு தொடக்கவிழாவை முன்னிட்டு, தமிழ்நாடு அரசு போக்குவ ரத்துக் கழகங்களின் சார்பில், 214 புதிய பேருந்துகள் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் கொடிய சைத்து தொடங்கி வைத்தார்.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான திராவிட மாடல் அரசு பொறுப்பேற்று நான் காண்டுகள் நிறைவடைந்து, ஐந்தாம் ஆண்டுதொடக்கவிழாவைமுன்னிட்டு, நேற்று முன்தினம் (7.5.2025) சென்னை தீவுத்திடலில் நடைபெற்ற விழாவில், தமிழ்நாடு அரசு போக்குவ ரத்துக் கழகங்களின் சார்பில், 214 புதிய பேருந்துகளின் சேவையை கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

தமிழ்நாட்டில் உள்ள ஏழை, எளிய, நடுத்தர மற்றும் அனைத்து பொதுமக் களுக்கு இன்றியமையாத பொதுப் போக்குவரத்துச் சேவைகளை, எட்டு தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழ கங்களின் வாயிலாக, குறைந்த கட்ட ணத்தில் அரசு வழங்கி வருவதோடு, அனைத்து கிராமப்பகுதிகளுக்கும் பேருந்து பயண வசதியை ஏற்படுத்தி மாநிலம் முழுவதும் தடையற்ற போக் குவரத்து சேவையை அளித்து வருகி றது.

பொது மக்களின் தேவைக்கேற்ப புதிய பேருந்து வழித்தடங்களை தொடங்கி வைத்தல், புதிய பேருந்து களை அறிமுகப்படுத்தல், பழைய பேருந்துகளை புதுப்பித்தல், பேருந்து பணிமனைகளை மேம்படுத்துதல், பணிச்சுமையை குறைக்கும் விதமாக நவீன இயந்திரங்கள் அறிமுகப்படுத் தல், பணியாளர்களுக்கான ஓய்வு அறைகளை மேம்படுத்தல் போன்ற பல்வேறு திட்டங்களை சீரிய முறை யில் செயல்படுத்தி வருகிறது.

இந்த சேவைகளால், மகளிர், மாணவ, மாணவியர், மாற்றுத்திற னாளிகள் மற்றும் உதவியாளர்கள், திருநங்கைகள், சுதந்திரப் போராட்ட வீரர்கள், தமிழ் அறிஞர்கள், மொழிப் போர் தியாகிகள், மூத்த குடிமக்கள் மற் றும் குறிப்பிட்ட இதர பிரிவினருக்கு கட்டணமில்லா பயணச்சலுகை வழங் கப்படுகிறது.

சாதாரண நகர கட்டண பேருந்துக ளில் மகளிர் கட்டணமில்லாமல் பய ணம் மேற்கொள்வதற்காக தொடங்கப் பட்ட “மகளிர் விடியல் பயணம் திட்டம்” மூலம் 684 கோடி பயண நடைகள் மேற்கொள்ளப்பட்டன.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான அரசு பொறுப்பேற்ற நான்காண்டுகளில், தமிழ்நாட்டின் அனைத்துப் பகுதிகளி லும், பயணிக்கும் பயணிகளின் வச திக்காக, 3,727 புதிய பேருந்துகளும், 1500 பேருந்துகள் புதுப்பி க்கப்பட்டும் பயன்பாட்டில் உள்ளன.

இதன் தொடர்ச்சியாக, நேற்று (7.5.2025) சென்னை தீவுத்திடலில் நடைபெற்ற நிகழ்ச்சியில், அரசு விரை வுப் போக்குவரத்துக் கழகத்திற்கு 27 புதிய அதிநவீன சொகுசு பேருந்து களையும், விழுப்புரம் அரசு போக்குவ ரத்துக் கழகத்திற்கு 114 புதிய பேருந்துக ளும், சேலம் அரசு போக்குவரத்துக் கழகத்திற்கு 10 புதிய பேருந்து களும், கோயம்புத்தூர் அரசு போக்குவரத்துக் கழகத்திற்கு 31 புதிய பேருந்துகளும், மதுரை அரசு போக்குவரத்துக் கழகத் திற்கு 14 புதிய பேருந்து களும், திரு நெல்வேலி அரசு போக்குவரத்துக் கழ கத்திற்கு 18 புதிய பேருந்துகளும் என மொத்தம் 214 புதிய பேருந்துகளை பொதுமக்களின் பயன்பாட்டிற்காக முதலமைச்சர் அவர்கள் இன்றைய தினம் கொடியசைத்து தொடங்கி வைத் தார்கள்.

இந்த 214 புதிய பேருந்துகளில், மக ளிரின் சிறப்பான வரவேற்பினை பெற்ற “மகளிர் விடியல் பயணத் திட்டத் திற்காக” 70 நகரப் பேருந்துகளும் அடங்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

இப்பேருந்துகளின் சேவைகளை தொடங்கிவைத்த முதலமைச்சர் அவர் கள், பேருந்தில் ஏறி பேருந்தினை பார் வையிட்ட பிறகு, விடியல் பயணம் திட் டத்தில் மூலம் பயன் பெறும் பெண்களுக்காக முறையாக பேருந்து நிறுத்தத்தில் பேருந்துகளை நிறுத்தி அவர்களை ஏற்றிச் செல்ல வேண்டும் என்று நடத்துனர் மற்றும் ஓட்டுனர்களி டம் அறிவுறுத்தினார்.

இந்நிகழ்ச்சியில், துணை முதல மைச்சர் உதயநிதி ஸ்டாலின், போக்கு வரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி. சிவ சங்கர், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி. கே. சேகர்பாபு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, நாடாளுமன்ற உறுப் பினர்கள் டி.ஆர்.பாலு, ஆ.ராசா, தயா நிதி மாறன், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், போக்குவரத்துத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் க.பணீந்திர ரெட்டி, போக்குவரத்துக் கழகங்களின் மேலாண் இயக்குநர் கள், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

மகளிர் விடியல் பயணத்திட்டம் குறித்து

# முதல்வர் மு.க.ஸ்டாலின் - பேருந்தில் பயணித்து மகளிரிடம் உரையாடல்!

## மாதம் ரூ.2 ஆயிரம் வரை சேமிக்க முடிகிறது என மகளிர் உற்சாகம்!

**சென்னை, மே 9 – தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் மாநகரப் பேருந்தில் பயணம் செய்து “மகளிர் விடியல் பயணத் திட்டம்” குறித்து பயணிக ளிடம் உரையாடினார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான அரசு நேற்று முன்தினம் (7.5.2025) பொறுப்பேற்று நான்காண்டுகள் நிறைவு பெற்று, ஐந்தாம் ஆண்டில் அடி யெடுத்து வைக்கிறது.

நேற்று முன்தினம் (7.5.2025) தலைமைச் செயலகம் வருகைத்தந்த தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், தலைமைச் செயலகத்திலிருந்து சென்னை அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் நடைபெற உள்ள விழா விற்கு செல்லும் வழியில், சென்னை வள்ளலார் நகரிலிருந்து விவேகானந்தர் இல்லம் வரை செல் லும் 32B மாநகரப் பேருந்தில் அரசி னர் தோட்டம் அருகில் உள்ள ஓமந்து ரார் பேருந்து நிறுத்தத்திலிருந்து பயணம் செய்து முதலமைச்சர் அவர் கள் பொறுப்பேற்ற முதல் நாள் அறி வித்த 5 திட்டங்களில் ஒன்றான “மக ளிர் விடியல் பயணம் திட்டத்தின்” கீழ் பேருந்துகளில் பயணம் செய்த பயணி களிடம் உரையாடினார்.

அப்போது, பேருந்தில் பயணம் மேற்கொண்ட பெண் பயணிகள் இந்த மகத்தான திட்டமான “மகளிர் விடியல் பயணம் திட்டம்” மூலம் நாங்கள் கட்ட ணமில்லாமல் பயணம் மேற் கொண்டு வருவதால், நேரத்திற்கு வேலைக்கு செல்ல முடிகிறது என்றும், இதனால், மாதம் 2000 ரூபாய் வரை யில் சேமித்து வைக்க முடிகிறது என் றும், அந்த சேமிப்புத் தொகையிலி ருந்து தங்கள் பிள்ளைகளுக்கான படிப்பு செலவுகளுக்கும், மருத்துவ செலவுகள் மற்றும் இதர செலவுகளுக் கும் பயன்படுத்துகிறோம் என்பதை யும் தெரிவித்து, இத்திட்டத்தை அறி வித்து செயல்படுத்தி வருவதற்கும் நான்காண்டு முடிவடைந்து ஐந்தாண் டும் ஆண்டு தொடங்குவதையொட்டி முதலமைச்சர் அவர்களுக்கு வாழ்த்து தெரிவித்து மீண்டும் இந்த நல்லாட்சி தொடர வேண்டும் என்ற தங்களது விரும்பத்தையும் தெரிவித்துக் கொண்டனர்.

முதலமைச்சர் அவர்கள், விடியல் பயணம் திட்டத்தில் மூலம் பயன் பெறும் பெண்களுக்காக முறையாக பேருந்து நிறுத்தத்தில் பேருந்துகளை நிறுத்தி அவர்களை ஏற்றிச் செல்ல வேண்டும் என்றும், பேருந்தின் முழு கொள்ளளவு பயணிகளோடு பேருந்து பயணத்தை தொடர வேண்டும் என் றும் நடத்துனர் மற்றும் ஓட்டுனர்களி டம் அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வின்போது, துணை முத லமைச்சர் உதயநிதி ஸ்டாலின், போக் குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.

# மதுராந்தகம் நகர தி.மு.க. சார்பில் சாதனை விளக்கப் பொதுக்கூட்டம்!

*காஞ்சிபுரம், மே 9 - காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம் மதுராந்தகம் நகர தி.மு.க. சார்பில் திரா விட நாயகன், கழக தலை வர் முதல்வர் அவர்களின் நாடு போற்றும் நான்காண்டு தொடரட்டும் பல்லாண்டு! சாதனை விளக்கப் பொதுக் கூட்டம் இன்று ( 9.05.2025 வெள்ளிக்கிழமை) மாலை 6.00 மணியளவில் மதுராந்த கம் தேரடி தெருவில் நகரக் கழகச் செயலாளர் கு.குமார் எம்.சி. தலைமையில் நடை பெறுகிறது.*

*நகர நிர்வாகிகள் எம். என்.மூர்த்தி எம்.சி., பொன். கேசவன், என்.சங்கர், இரா. பரணி, கோமதி கபிலன், கிருஷ்ணன், மாவட்டப் பிர திநிதிகள் டி.கே.ராஜா, எம். ராஜா, நா.ராஜகோபால், கே.குருமூர்த்தி ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.*

*மாவட்டக் கழகச் செய லாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ., மாநில மகளிர் அணி தலை வர் விஜயா தாயன்பன் ஆகி யோர் சிறப்புரை யாற்றுகின் றனர்.*

*மேலும் மாவட்ட துணைச் செயலாளர் க.செல் வம் எம்.பி., தலைமை செயற்குழு உறுப்பினர் கு.மலர்விழி குமார், தலை மைச் செயற்குழு உறுப்பி னர் எஸ்.டி.பிரேம்சந்த், தொகுதி பொறுப்பாவார் எம்.டி.ஆர்.சாரதி மணிமா றன், மாவட்ட அணிகளின் நிர்வாகிகள் கி.சிவலிங்கம், ஆர்.ராஜேஷ், மகஅ.தலை, அ.நூருல்அமீன், எம்.பாளை யத்தான், எம்.காமராஜ், அ. ஆண்டோசிரில்ராஜ், த.சரளா எம்.சி., ஏஞ்சல்ராஜ குமாரி, நகர்மன்ற உறுப்பி னர்கள் வெ.கற்பகம், பி.கோமதி, ச.அர்ச்சுனன், கு.ராதிகா, ம.நதியா, ல. ஞானசுந்தரி, ப.சித்ரா, க. சித்ரா, தே.ஜெர்லின்ஜோஸ், தே.சசிகுமார், ரா.செல்வம், சசிகலாதேவி, கே.லட்சுமி,*

*கிளை செயலாளர்கள் கி.ஏழுமலை, வி.குமார், நா.ரமேஷ், கோ.அரிதாஸ், ப.மகேந்திரன், வே. லட்சுமி பதி, சீ.பன்னீர்செல்வம், ம. முருகேசன், தே.அருண்சங்க,ர் க.விஜயகு மார், பொன்.அருள், ஜி.சண் முவ. ஹரிகிருஷ்ணன், மற்றும் பலர் கலந்து கொள்கின்றனர்.*



தருமபுரி கிழக்கு மாவட்ட கழக அலுவலகம் தளபதி அரங்கத்தில் நடைபெற்ற செயற்குழு கூட்டத்தில் தர்மபுரி கிழக்கு மாவட்ட கழக பொறுப்பாளர்,நாடாளுமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர்.ஆ.மணி கழக ஆட்சி சாதனை விளக்க பொதுக்கூட்டம் ஒன்றியங்கள் தோறும் நடத்துவது,2026 சட்டமன்ற தேர்தல் உள்ளிட்ட கழக ஆக்க பணிகள் குறித்து ஆலோசனைகள் வழங்கி சிறப்புரை ஆற்றினார்.கூட்டத்தில் முன்னாள் மாவட்ட கழகச் செயலாளர் தடங்கம் பெ.சுப்ரமணி, நாட்டான் மாது, சி.செல்வராஜ், இரா,தாமரைச்செல்வன்,ஆர்.பி செந்தில்குமார், ஆறுமுகம்,உமாசங்கர், ரேணுகாதேவி,மற்றும் ஒன்றிய கழக செயலாளர்கள்,பேரூர் கழக செயலாளர்கள்,அணிகளின் தலைவர்கள்,துணை தலைவர்கள்,அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள்,கிளை கழக நிர்வாகிகள்,உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

ரூ.600 கோடி மதிப்பில் திட்டம் - வைகை ஆற்றுத் தண்ணீர் திண்டுக்கல்லுக்கு வரும் !

# முதல்வர் மு.க.ஸ்டாலின் குடிநீர்த் திட்டத்தை தொடங்கி வைப்பார்!

## அமைச்சர் ஐ.பெரியசாமி பேச்சு!

*திண்டுக்கல், மே.9- ரூ.600 கோடி மதிப்பில் வைகை ஆற்று தண்ணீர் திண் டுக்கல்லுக்கு வரும் திட் டத்தை திராவிட மாடல் ஆட்சி நாயகன் தமிழக முதல் வர் மு.க. ஸ்டா லின் குடிநீர் திட்டத்தை தொடங்கி வைப் பார் என்று ஆலமரத்துப் பட்டி ஊராட்சியில் நடை பெற்ற மே1 சிறப்பு கிராம சபை கூட்டத்தில் ஊரக வளர்ச்சி துறை அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் பேசியதோடு வரலாற்று சாத னையாக தமிழ்நாட்டில் கலைஞர் கனவு இல்ல திட் டம் மூலம் ஒரு லட்சம் வீடு கள் கட்டி முடிக்கப் பட்டுள் ளன என அமைச்சர் பொதுமக்கள் மத்தியில் ஐ.பெரியசாமி பெருமிதமாக பேசினார்.*



*திண்டுக்கல் மாவட்டம் ஆத்தூர் ஒன்றியம் ஆலமரத் துப்பட்டி ஊராட்சியில் மே1 சிறப்பு கிராம சபை கூட்டம் தமிழ்த்தாய் வாழ்த்துடன் நடைபெற்றது.*

*கூட்டத்திற்கு திண்டு க்கல் மாவட்டஆட்சியர் எஸ்.சரவ ணன் தலைமை தாங்கினார். ஊராட்சிகளின் உதவி இயக் குநர் ரெங்கராஜ் வரவேற் றார்.*

*திண்டுக்கல் கோட்டாட்சி யர் சக்திவேல், கூட்டுறவு சங் கங்களின் இணைபதிவாளர் குருமூர்த்தி, மகளிர் திட்ட இயக்குநர் சதீஸ்பாபு, தோட் டக்கலை துணை இயக்குநர் காயத்ரி, திமுக தலைமை செயற்குழு உறுப்பினர் நட ராஜன், கிழக்கு மாவட்ட திமுக அவைத்தலைவர் வழக் கறிஞர் காமாட்சி, பொருளா ளர் கு.சத்தியமூர்த்தி, ஒன்றிய செயலாளர்கள் பிள்ளையார்நத்தம் முருகே சன், ராமன், முன்னாள் ஒன் றியக்குழு உறுப்பினர் பாஸ்க ரன், முன்னாள் ஒன்றிய பெருந்தலைவர் மகேஸ்வரி முருகேசன், துணைத்தலை வர் ஹேமலதா மணிகண் டன், ஆகியோர் முன்னிலை வகித்தனர்.*

*ஊராட்சியின் வரவு செலவு கணக்குகளை வட் டார வளர்ச்சி அலுவலர் தட் சிணா மூர்த்தி வாசித்தார்.*

*அதன் பின்னர் பொதுமக் கள் மத்தியில் பேசிய மாவட்ட ஆட்சியர் எஸ்.சர வணன் திண்டுக்கல் மாவட் டத்தில் பொதுமக்கள் வைக் கும் அனைத்து கோரிக்கைகளும் நிறைவேற் றப்பட்டுள்ளது.*

*குறிப்பாக கலைஞரின் கனவு இல்ல திட்டத்திற்கு முன்னுரிமை கொடுத்து மனுக்கள் பெறப்பட்டு பய னாளிகள் தேர்வு செய்யப் பட்டு வருகின்றனர் என்றார். சிறப்பு அழைப்பாள ராக கலந்து கொண்ட திமுக மாநில துணை பொதுச்செய லாளரும், ஊரக வளர்ச்சி துறை அமைச்சருமான ஐ. பெரியசாமி பேசும் போது தமிழகத்தில் மக்களுக்கான மக்கள் நலனுக்கான நல் லாட்சி நடைபெற்று வருகி றது. வரலாற்று சாதனையாக கலைஞரின் கனவு இல்லம் திட்டம் மூலம் 1 லட்சம் வீடு கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. இந்த ஆண்டுக்கான பயனாளிகள் தேர்வு நடைபெற்று வருகி றது.*

*ஆத்தூர் சட்டமன்ற தொகுதியில் மட்டும் 2500 வீடுகள் கட்டி முடிக்கப் பட்டு இந்த வருடத்திற்கான பயனாளிகள் தேர்வில் சுமார் 350 பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். கலை ஞரின் கனவு இல்லம் திட் டத்தை பொறுத்தவரை வீடு இல்லாத அனைவருக்கும் வழங்க முடிவு செய்யபட்டு சுமார் 10 லட்சம் வீடுகள் கட்டி கொடுக்க திட்டமிடப்பட்டு வருடத் திற்கு 1 லட்சம் வீடுகள் வரை வழங்கப்படும் என்றார். ஆத் தூர் தொகுதிக்கு காமராஜர் நீர்; தேக்க குடிதண்ணீர், காவிரி கூட்டுக்குடிநீர் திட்ட குடி தண்ணீர் மட்டுமின்றி விரைவில் வைகை ஆற்றில் இருந்தும் குடிதண்ணீர் ரூ.600 கோடி மதிப்பில் கொண்டு வரப்பட உள்ளது.*

*விரைவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பொற்கரங்களால் தொடங்கி வைக்கப்பட உள்ளது.*

*இதன் மூலம் நிலக்கோட்டை, ஆத்தூர், திண்டுக்கல் தொகுதி மக்கள் பயன்பெறுவார்கள் என்றார். அப்போது அங்கு கூடியிருந்த நூற்றுக்கணக்கான மக்கள் மகிழ்ச்சியில் கைதட்டி ஆர வாரம் செய்தனர். பின்னர் அப்பகுதியை சேர்ந்த பொது மக்கள் ஆலமரத்துப்பட்டி பிரிவில் நிழற்குடை வசதி யும், வரதராஜபுரத்திற்கு சாலை வசதியும் வேண்டு மென கோரிக்கை விடுத்தனர். உடனடியாக அவர்கள் கோரிக்கையை நிறைவேற்றி மே 2 முதல் அதற்கான பணி கள் தொடங்கும் என்றார். இதுபோல நியாய விலை கடை வசதி வேண்டுமென கோரிக்கை விடுத்தவுடன் உடனடியாக புதிய கட்டிடம் கட்டுவதற்கு அதிகாரிகளுக்கு உத்தர விட்டார். ஆலமரத் துப்பட்டி கிராம மக்கள் தங் கள் கோரிக்கையை ஏற்று நிறைவேற்றி கொடுத்த அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களுக்கு மனதார பாராட்டும் நன்றியும் தெரி வித்தனர்.*

*அதன்பின்னர் ஊராட் சியை சேர்ந்த தூய்மை பணி யாளர்களை கௌரவிக்கும் வண்ணம் அமைச்சர் ஐ.பெரி யசாமி தூய்மை பணியாளர் களுக்கு சால்வை அணிவித்து பழரசம் கொடுத்து வாழ்த்தி னார். அதை தொடர்ந்து மக ளிர் சுய உதவி குழுவினருக்கு கடனுதவிகளை வழங்கி னார். சிறப்பு கிராம சபை கூட்டத்தில் மகளிர் திட்ட அலுவலர் புஷ்பா, ஒருங்கி ணைந்த குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலர் பூங்கொடி, ஆத்தூர் வட்டாட்சியர் முத்து முருகன், மண்டல துணை வட்டாட்சியர் பிர வீனா, கிழக்கு மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் மணலூர் மணிகண்டன், ஒன்றிய பொறியாளர்கள் மைக்கேல் பிரிட்டோ, ராமநாதன், மாவட்ட தகவல் தொழில் நுட்ப அணி துணை ஒருங்கி ணைப்பாளர் பாறைப்பட்டி வாஞ்சிநாதன், தொண்ட ரணி துணைஅமைப்பாளர் கும்மம்பட்டி விவேகானந்தன், பஞ்சம் பட்டி மணி, செட்டியபட்டி விடுதலை முருகன், ஆத்தூர் கிழக்கு ஒன்றிய திமுக அவைத்தலைவர் சிவக்குமார் துணை செயலாளர்கள் எம். சி.பாண்டியன், ராஜேந்தி ரன், வசந்தா கென்னடி, பொருளாளர் கருப்பையா, அகரம் பேரூராட்சி மன்ற தலைவர் நந்தகோபால், சின் னாளபட்டி பேரூராட்சி மன்ற தலைவர் பிரதீபா கன கராஜ், துணைதலைவர் ஆனந்தி பாரதிராஜா,*

*சின்னாளபட்டி பேரூர் கழக திமுக பொறுப்பாளர் பாலகிருஷ்ணன், மாவட்ட பிரதிநிதி செட்டியபட்டி ராஜா, முன்னாள் ஒன்றியக் குழு உறுப்பினர்கள் காணிக்கை ராஜ், செல்வி காங்கேயன், காணிக்கை சாமி, முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர்கள் ஆலமரத் துப்பட்டி ஆறுமுகம், உலகநா தன், ராஜேஸ்வரி தங்கவேல், சீவல்சரகு ராணி ராஜேந்தி ரன், போடி காமன்வாடி நாக லெட்சுமி சதீஸ்குமார், கோமதி செல்வக்குமார், புவ னேஸ்வரி அருளரசன், ஒன் றிய மாணவரணி அமைப்பா ளர் அரவிந்தன், துணை அமைப்பாளர்கள் கார்த்திக், அருண் பாண்டியன், மாவட்ட சுற்றுச்சூழல் அணி துணை அமைப்பாளர் விக் னேஸ்வ ரன், அரசு ஒப்பந்த காரர்கள் ஜீசஸ் அகஸ்டின், மெல்வின், பேரூர் மாணவ ரணி அமைப்பாளர் வினோத் ஒச்சப்பன், வீரக்கல் ஊராட்சி முன்னாள் துணைத்தலை வர் யூஜின், கிளை கழக செயலா ளர்கள் காசி ராஜன், பிச்சை முத்து, அருள்பாண்டியன், தேவராஜ், ராமகிருஷ்ணன், சின்னதுரை, உட்பட திமுக நிர்வாகிகள், பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.*

*நிறைவாக ஊராட்சி மன்ற செயலாளர் பாலதண் டாயுதபாணி நன்றி கூறி னார்.*


